மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.01/2023
அ.வ.எண்.102/2018

1. N.கோவிந்தன்
2. G.செல்வராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. N.முத்து
2. M.விஜயகுமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.04.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வழக்குரை சொத்துவிவரத்தில் ச.எண்.139A/1B என்பதற்கு பதிலாக ச.எண்.139A/B1 என தவறுதலாக உள்ளது தெரியவந்தது. தவறு தட்டச்சு பிழையால் நேர்ந்துள்ளது. மேற்படி சொத்துவிவரத்தை மனுவில் கண்டவாறு திருத்தாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே வழக்குரை சொத்துவிவரத்தை மனுவில் கண்டவாறு திருத்த உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 2ம் எதிர்மனுதாரர் தனக்காகவும், 1ம் எதிர்மனுதாரருக்காகவும் சேர்த்து தாக்கல் செய்யும் எதிருரையின் சுருக்கம்:

இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் மனு பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள சர்வே எண்கள் நிலையில் இல்லை. மேற்படி சர்வே எண்களுக்குண்டான எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்காத நிலையில் மனுதாரர்கள் திருத்தப்பாடு செய்ய கோருவது ஏற்புடையதல்ல. மனுதாரர்கள் திருத்தப்பாடு செய்ய வேண்டிய முகாந்திரம் இல்லை என்பதால் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வழக்குரை சொத்துவிவரத்தில் ச.எண்.139A/1B என்பதற்கு பதிலாக ச.எண்.139A/B1 என தவறுதலாக உள்ளது தெரியவந்தது என்றும், தவறு தட்டச்சு பிழையால் நேர்ந்துள்ளது என்றும், மேற்படி சொத்துவிவரத்தை மனுவில் கண்டவாறு திருத்தாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே வழக்குரை சொத்துவிவரத்தை மனுவில் கண்டவாறு திருத்த உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் மனு பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ள சர்வே எண்கள் நிலையில் இல்லை என்றும், மேற்படி சர்வே எண்களுக்குண்டான எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்காத நிலையில் மனுதாரர்கள்

திருத்தப்பாடு செய்ய கோருவது ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர்கள் திருத்தப்பாடு செய்ய வேண்டிய முகாந்திரம் இல்லை என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) இவ்வழக்கின் சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மேட்டூரிலிருந்து சேலம் செல்லும் பிரதான சாலையிலிருந்து ச.எண்.139A/1B வழியாக சென்று, மேற்படி சர்வே எண்ணிலிருந்து வடக்கு நோக்கி சென்று, ச.எண்.47A/2A ஐ அடைந்து பின்னிட்டு தென்வடலாகவும், பின் கிழக்கு நோக்கியும் பொது கிணறு வரை 15 அடி அகலத்தில் செல்லும் தாவா வண்டித்தடத்தில் 7 அடி அகல இடத்தை ஆக்கிரமித்து எதிர்மனுதாரர்கள் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதாக கூறி எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் வழக்குரை சொத்துவிவரத்தில் ச.எண்.139A/1B என்பதற்கு பதிலாக ச.எண். 139A/B1 என தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டதாகவும், மேற்படி தவறு தட்டச்சு பிழையால் ஏற்பட்ட ஒன்று எனவும், எனவே வழக்குரை சொத்துவிவரத்தில் திருத்தம் செய்ய கோரி மனுதாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் வழக்குரையை முழுமையாக பரிசீலனை செய்கையில், வழக்குரை பத்தி 8 ல், மனுதாரர்களால் ச.எண்.139A/1B ல் தாவா வண்டிப்பாதை செல்வதாக சரியான சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்கண்ட சங்கதியை கருத்தில் கொள்கையிலும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும், மனுதாரர்களால் வழக்கு சொத்துவிவரத்தில் மட்டும் தவறுதலாக ச.எண்.139A/B1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(v) இந்நிலையில் மனுதாரர் கோரும் திருத்தப்பாடானது தட்டச்சு பிழையால் நேர்ந்த ஒன்று என்பதாலும், இவ்வழக்கில் விசாரணை துவங்கப்படாத நிலையிலும், மனுதாரர்கள் வழக்குரை திருத்தத்தை மேற்கொள்ளும் பட்சத்தில் அதுகுறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவோ, சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவோ வாய்ப்பு

வழங்கப்படும் என்பதாலும், மனுதாரர்கள் கோரும் திருத்தங்கள் அனுமதிக்கத்தக்கது என்றும், மேற்படி திருத்தங்களை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதகமான சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், நீதியின் நலனையும் கருத்தில் கொள்கையில், மனுவில் கோரியுள்ள திருத்தமானது இருதரப்பினரிடையே உள்ள உண்மையான பிரச்சனையை தீர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) இருப்பினும் இவ்வழக்கானது எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்காக பட்டியலிடப்பட்டுள்ள நிலையில், வழக்குரையை திருத்தக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு விசாரணையில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படும் காலதாமதத்தை ஈடு செய்யும் வகையில், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2500/- செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2500/-செலவுத்தொகையாக 12.06.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 12.06.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.05 15:45:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2024.06.05 15:46:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.